# மேல்நிலை இரண்டாம் ஆண்டு------- கணக்குப்பதிவியல்

## பாடம் 1. இறுதிகணக்குகள் - சரிக்கட்டுதல்கள்

காலம் : 1½ மணி நேரம் மதிப்பெண்கள் : 60

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. இறுதி சரக்கிருப்பு தோன்றுவது :
   (அ) வியாபரக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு (ஆ) இலாப நட்டக் கணக்கில்
   (இ) வியாபாரக் கணக்கில்
2. 31-03-2010 அன்று இருப்பாய்வின்படி வங்கிக் கடன் 10%.(01-04-2009) ₹.4,00,000 வட்டி கொடுத்தது ₹. 14,000, கொடுபட வேண்டிய வங்கிக் கடன் மீதான வட்டி:
   (அ) ₹. 26,000 (ஆ) ₹. 46,000 (இ) ₹. 36,000
3. வியாபாரத்தின் நிதி நிலையை ------------------ தயாரிப்பதின் வாயிலாக அறியலாம் :
   (அ) இறுதிக் கணக்குகள் (ஆ) முதல் கணக்குகள் ( இ ) இருப்பாய்வு
4. 31-03-2000 அன்று இருப்பாய்வின்படி பற்பல கடனீந்தோர் ₹.50,000 சரிக்கட்டுதலின் படி பற்பலகடனீந்தோர் மீது 2 % ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டிய தொகை :
   (அ) ₹. 10,000 (ஆ) ₹. 1,000 (இ) ₹. 10
5. உரிமையாளர் தனது சொந்த செலவிற்காக, தொழிலிலிருந்து பணம் எடுப்பது -------- எனப்படும்.
   (அ) சொத்து (ஆ) முதல் ( இ) எடுப்பு
6. முதல் மீது வட்டி எதனுடன் கூட்டப்படிகிறது?
   (அ) சொத்துடன் (ஆ) முதலுடன் ( இ) எடுப்புடன்
7. இருப்பாய்வில் பற்று பக்கத்தில் தரப்பட்டிருக்கும் அநாமத்துக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பில் ------ பக்கத்தில் தோன்றும்.
   (அ) சொத்து (ஆ) பொறுப்பு ( இ) சொத்து மற்றும் பொறுப்பு
8. உள் திருப்பம் ---------- லிருந்து கழித்து காண்பிக்கப்படும்.
   (அ) கொள்முதல் (ஆ) முதல் ( இ) விற்பனை
9. இருப்பு நிலைக்குறிப்பில், முன்கூட்டி செலுத்திய வருமானம் எந்தப் பக்கத்தில் தோன்றும்?
   (அ) பொறுப்பு (ஆ) வரவு ( இ) சொத்து
10. கொடுபட வேண்டிய செலவினங்கள் ----------- ஆகும்.
   (அ) முதல் (ஆ) சொத்து ( இ) பொறுப்பு

## பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 11- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. இருப்பு நிலைக்குறிப்பு பற்றி சிறு குறிப்பு வரைக.
12. கூடியுள்ள வருமானம் என்றால் என்ன?
13. முதல் மீது வட்டி ₹. 1,500 . சரிகட்டுப் பதிவு தருக.
14. 2014 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பாய்வின்படி, பெற்ற கழிவு ₹. 1,000. கூடியுள்ள கழிவு ₹. 150. சரிக்கட்டுப் பதிவு தருக.
15. பின்வரும் விவரங்களிலிருந்து வியாபார கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 7,000 | கொள்முதல் திருப்பம் | 900 |
| கொள்முதல் | 2,000 | விற்பனை திருப்பம் | 500 |
| விற்பனை | 3,000 | இறுதி சரக்கிருப்பு | 15,000 |



16. மொத்த இலாபத்தினை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,500 | கொள்முதல் | 15,100 |
| விற்பனை திருப்பம் | 500 | கொள்முதல் திருப்பம் | 850 |
| விற்பனை | 19,500 | இறுதி சரக்கிருப்பு | 1,200 |

17. இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்யவும்

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 43,750 | பற்பல கடனாளிகள் | 87,500 |
| அறைகலன் | 2,375 | முதல் | 68,625 |
| ரொக்கம் | 10,000 | இறுதி சரக்கிருப்பு | 12,500 |

## பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 18 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. நேரடிச் செலவிற்கு சில உதாரணங்கள் தருக.
19. வாரா ஐயக்கடன் ஒதுக்கு பற்றி சிறு குறிப்பு வரைக.
20. 31.03.12 அன்றைய இருப்பாய்வின்படி, முதல் மீது வட்டி ₹. 6,00,000 , எடுப்புகள் ₹.50,000, எடுப்புகள் மீது வட்டி 5 % . சரிகட்டுப் பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக
21. 31.03.02 அன்றைய இருப்பாய்வின்படி,பற்பல கடனாளிகள் ₹. 56,000. வாராக் கடன் ₹. 6,000 போக்கெழுதுக. இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.
22. திருமதி. லட்சுமியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து 31 டிசம்பர் 2012 ஆம் ஆண்டிற்கான இலாப நட்ட கணக்கினைத் தயாரிக்கவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 89,000 | வட்டி பெற்றது | 250 |
| வாடகை | 4,000 | உள்தூக்கு கூலி | 500 |
| பொதுச்செலவுகள் | 8,000 | கழிவு செலுத்தியது | 2,000 |

23. பின்வரும் விவரங்களிலிருந்து நிகர இலாபம் அல்லது நிகர நட்டத்தினை காண்க

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| வாடகை பெற்றது | 6,000 | கொள்முதல் செலவு | 15,300 |
| வாடகை செலுத்தியது | 3,500 | மொத்த இலாபம் | 40,000 |
| அளித்த கழிவு | 1,200 | வாரா கடன் | 5,000 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 3,000 | தேய்மானம் | 3,000 |

24. திரு. விடுதலை விரும்பியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து 31 டிசம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான இருப்புநிலைக் குறிப்பினை தயாரிக்கவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| சம்பளம் | 15,000 | நிகர இலாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,800 | சீருந்து | 43,200 |
| பற்பல கடனாளிகள் | 12,800 | சரக்கிருப்பு ( 01.01.17 ) | 15,000 |

25. கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 40,000 | எடுப்புகள் | 10,000 |
| அறைகலன் | 2,375 | நிகர இலாபம் | 19,875 |
| வங்கி மேல்வரைப்பற்று | 3,750 | முதல் | 58,750 |
| பற்பல கடனாளிகள் | 87,500 | இறுதி சரக்கிருப்பு | 22,500 |

26. கீழ்க்கண்டசரிக்கட்டுதல்களுக்கு 2018, மார்ச் 31 ஆம் நாளன்று சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹. 5,000

ii) வாராக்கடன் ₹. 500 போக்கெழுதவும்

iii) அறைகலன் மீதான தேய்மானம் ₹.1,000

## பகுதி --- IV

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். $5 \times 5 = 25$

27. 31 – 03 – 2014 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹. 2,01,200, வாராக்கடன் ₹.1,200 சரிக்கட்டுதல்கள் :

i) ₹. 5,000 வாராக் கடன் போக்கு எழுதுக.

ii) பற்பல கடனாளிகள் மீது 10 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

iii) கடனாளிகள் மீது 2 % தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

28. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31 மார்ச் 2018 ஆம் ஆண்டிற்கான வியாபார கணக்கினை தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | வெளித்தூக்கு கூலி | 5,100 |
| கொள்முதல் | 27,000 | உள்திருப்பம் | 7,000 |
| விற்பனை | 50,000 | நிலகரி மற்றும் எரிவாயு | 3,300 |
| கூலி | 2,500 | உள்தூக்கு கூலி | 2,600 |
| வெளித்திருப்பம் | 5,200 | இறுதிச் சரக்கிருப்பு | 5,200 |
| வாடகை | 7,500 | கொள்மீதான வண்டிச் சத்தம் | 8,000 |

29. கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்ட கணக்கினைத் தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | பெற்ற வட்டி | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| நிலைச் சொத்துகள் மீதான தேய்மானம் | 8,000 | வெளித்தூக்கு கூலி | 2,500 |
| தள்ளுபடி அளித்தது | 12,000 | காப்பீடு | 3,500 |
| விளம்பரம் | 4,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| வாடகை மற்றும் வரி | 1,000 | எரிபொருள் மற்றும் வாயு | 1,200 |

30. கீழ்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

i) வாராக்கடன் ₹.3,000

ii) எடுப்பு மீதான வட்டி ₹. 10,000

iii) கொடுபடவேண்டிய கூலி ₹. 2,300

iv) இறுதிச் சரக்கிருப்பு ₹.25,000

v) வாடகை முன்கூட்டி பெற்றது ₹.18,000



31. 31.03.2005 அன்று திரு. கணேஷ் -ன் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. 2005 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாப நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

2005 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு

| பற்று இருப்புகள் | ₹. | வரவு இருப்புகள் | ₹. |
|---|---|---|---|
| எடுப்புகள் | 8,000 | முதல் | 40,000 |
| வங்கி ரொக்கம் | 3,400 | பற்பலக் கடனீந்தோர் | 9,000 |
| கை ரொக்கம் | 13,000 | விற்பனை | 32,000 |
| கூலி | 2,000 | | |
| கொள்முதல் | 4,000 | | |
| சரக்கிருப்பு ( 01-04-2004 ) | 12,000 | | |
| கட்டடம் | 20,000 | | |
| பற்பல கடனாளிகள் | 8,800 | | |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 5,800 | | |
| வாடகை | 900 | | |
| கழிவு | 500 | | |
| பொதுச் செலவுகள் | 1,600 | | |
| அறைகலன் | 1,000 | | |
| | 81,000 | | 81,000 |

கூடுதல் தகவல் : இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹. 8,000.

32. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து திரு. ராஜா என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபர இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | மாத சம்பளம் | 2,600 |
| கொள்முதல் | 3,300 | முதல் | 52,000 |
| விற்பனை | 7,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கூலி | 2,700 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 7,500 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 | இறுதிச் சரக்கிருப்பு | 4,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 52,000 | கடனீந்தோர் | 500 |

33. பின்வரும் விவரங்களிலிருந்து 2010 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபார இலாபநட்ட கணக்கினைத் தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| கூலி | 9,000 | விற்பனை | 1,10,000 |
| கொள்முதல் | 40,000 | கட்டடம் | 1,00,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 60,000 | வட்டி செலுத்தியது | 5,000 |
| கை ரொக்கம் | 20,000 | அலுவலகச் செலவுகள் | 7,000 |
| எடுப்புகள் | 35,000 | பொதுச் செலவுகள் | 15,000 |
| வாடகை | 6,500 | கடனீந்தோர் | 90,000 |

கூடுதல்தகவல்கள் : அ) இறுதிச் சரக்கிருப்பு ₹.50,000 ஆ) கொடுபடவெண்டிய கூலி ₹.1,000

இ) கட்டடம் மீது 10% தேய்மானம் நீக்குக ஈ) முன்கூட்டி பெற்ற வாடகை ₹.1,500